தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)

*******

ஆணை எண். 084/ந/2021
நாள். 28.10.2021

திரு கோ.தவசிமுத்து,
திருவாரூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
திருவாரூர் நகராட்சி – எதிர்மனுதாரர்

திருவாரூர் மாவட்டம், கேக்கரை, 17–A, சன்னதி தெருவில் அமைந்துள்ள பாசனதாரர்கள் சபையின் தலைவர் திரு கோ. தவசிமுத்து அவர்களின் 20.05.2020 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறை மன்ற நடுவத்தில் 27.05.2020 அன்று பெறப்பட்டு 84/2021 என்ற முறையீட்டு எண்ணாக பதிவு செய்யப்பட்டது. இம்முறையீட்டு மனு குறித்து பெறப்பட்ட வாக்குமூலங்கள், அறிக்கைகள் மற்றும் ஆவணங்கள் அனைத்தும் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

## ஆணை

திருவாரூர் மாவட்டம், கேக்கரை, 17–A, சன்னதி தெருவில் அமைந்துள்ள பாசனதாரர்கள் சபையின் தலைவர் திரு கோ.தவசிமுத்து அவர்கள் தமது 20.05.2020 நாளிட்ட முறையீட்டு மனுவில், திருவாரூர் நகரம் 65ஆயிரம் மக்கள் தொகை கொண்டது, இந்நகரத்தில் பாதாள சாக்கடை திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு பல ஆண்டுகள் ஆகின்றன. இந்த திருவாரூர் நகரின் ஒட்டு மொத்த பாதாள சாக்கடை கழிவுநீர் முழுவதும் திருவாரூர் கேக்கரை பகுதியில் உள்ள சுத்திகரிப்பு நிலையத்திற்கு குழாய்கள் மூலம்

கொண்டு வரப்பட்டு சுத்திகரிக்கப்படுகின்றது. கேக்கரை – பிடாரி கோவில் தெரு பகுதியில் இந்த சாக்கடை கழிவு நீர் குழாய் உடைப்பெடுத்து கடந்த பல மாதங்களாக சாலை பகுதி, வாய்க்கால் தரிசு பகுதிகளில் வடிந்து அந்த சாக்கடை நீர் முழுவதும் பிடாரி கோவில் தெருவில் வசிக்கும் ஆதிதிராவிடர்கள் பகுதியில் உள்ள குளத்தில் தேங்கி கிடக்கின்றது. இந்த குறைபாட்டை பல மாதங்களுக்கு முன் திருவாரூர் நகராட்சி ஆணையரிடம் முறையிட்டும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்த பாதாள சாக்கடை கழிவுநீர் பராமரிப்பை சென்னையைச் சேர்ந்த ஒரு கம்பெனி நிர்வாகம் வருட பராமரிப்பு செலவாக வருடத்திற்கு ரூ.88 லட்சம் (ரூபாய் எண்பத்தி எட்டு லட்சம் மட்டும் ) பெற்றுக் கொண்டு எந்தவித பராமரிப்பு பணிகளும் செய்யாமல் இருப்பதை கண்காணிக்க தவறிய நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்பாட்டை கண்டித்து திருவாரூர் நகர மக்கள் பல வித ஆர்ப்பாட்டங்கள் செய்தும், பத்திரிக்கை செய்திகள் மூலம் அரசின் கவனத்திற்கு கொண்டு சென்றும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆகையால் தயவு செய்து சாக்கடை கழிவுநீர் உடைப்பை சரிசெய்ய உத்தரவிடுமாறு கோரி மனுதாரர் தனது மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள புகார்களுக்கு ஆதாரமாக தினகரன், தினமணி மற்றும் தி இந்து நாளிதழ்களின் செய்தி துணுக்குகளையும் மனுவோடு சேர்த்து அனுப்பியுள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் மனுவில் குறிப்பிட்டுள்ள புகார்களின் மீது திருவாரூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. திருவாரூர் நகராட்சி ஆணையர் தன் 08.03.2021 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் புகாரில் தெரிவித்துள்ள குறைபாடுகள் 31.05.2020க்கு முன்னதாகவே சரி செய்யப்பட்டுள்ளது எனவும், அதன்பின் ஏற்படும் பாதாளச்சாக்கடை அடைப்பு மற்றும் உடைப்புகள் அவ்வப்போது சரி செய்யப்பட்டு வருகிறது என தெரிவித்துள்ளார்.

3. முறையீட்டு மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக 11.03.2021 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 01.03.2021 நாளிட்ட அழைப்பாணை வாயிலாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரருக்கு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது. 11.03.2021 அன்று மனுதாரர்

அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகி கீழ்கண்டவாறு தமது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தின் முன் சமர்ப்பித்தார்.

"திருவாரூர் மாவட்டம், திருவாரூர் நகராட்சிக்கு உட்பட்ட கேக்கரை பிடாரி கோவில் அருகேயும், அங்கே அமைந்துள்ள பள்ளிக்கூடம், ரயில்வே கேட், தியேட்டர் ஆகிய இடங்களில் பாதாள சாக்கடையில் அடைப்பு ஏற்பட்டும், கழிவு நீர் குழாய்கள் உடைந்தும், எங்கள் பகுதியில் கழிவுநீர் தேக்கம் ஏற்பட்டு சுகாதார கேடு ஏற்படுவதால் மேற்கண்ட உடைப்பினை சரி செய்திட உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

4. 11.03.2021 நாளிட்ட விசாரணைக்கு திருவாரூர் நகராட்சி பொறியாளர் ஆணையர் (பொறுப்பு) ஆஜராகவில்லை. ஆணையர் (பொ) தமது 08.03.2021 நாளிட்ட கடிதத்தில் தற்போது சட்டமன்ற தேர்தல் – 2021 நடைபெறுவதனை முன்னிட்டு தேர்தல் நடத்தை விதிகளுக்குட்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தேர்தல் தொடர்பான விழிப்புணர்வு பணிகள் மற்றும் வாக்குச்சாவடி மையங்களில் எடுக்கப்படவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பான பணிகளை கவனித்து வருவதால் விசாரணை தேதியில் ஆஜராக இயலாத நிலை உள்ளதால் மற்றொரு விசாரணை தேதியில் ஆஜராக அனுமதிக்குமாறு அப்போதைய ஆணையர் திரு.ஆ.சண்முகம் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார். அதன் அடிப்படையில் 02.09.2021 அன்று நண்பகல் 12 மணிக்கு விசாரணைக்கு வருகை தருமாறு 13.08.2021 நாளிட்ட அழைப்பாணை திருவாரூர் நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. திரு.ஆ.சண்முகம் ஆணையாளர் மாறுதலில் சென்றதால் புதியதாக பொறுப்பேற்ற திருவாரூர் நகராட்சி ஆணையாளர் 02.09.2021 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகி கீழ்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார். "திருவாரூர் நகராட்சி ஆணையராக கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு பொறுப்பேற்ற நான் திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட கேக்கரை பிடாரி கோவில் பகுதியில் பாதாளச்சாக்கடை குழாயில் பாதிப்பு ஏற்பட்டதைத் தொடர்ந்து அப்பகுதியில் கழிவு நீர் தேக்கம் ஏற்பட்டதை கவனத்தில் கொண்டு, மேற்கண்ட பழுதினை இரண்டு வாரங்களுக்கு முன்பே சரி செய்யப்பட்டு விட்டது என்றும், தற்போது அப்பகுதியில் சாக்கடை கழிவு நீர் தேங்குவதில்லை என்றும்,

பொதுமக்களுக்கும் எவ்வித பாதிப்பும் இல்லை. மேலும் இது தொடர்பான புகைப்பட நகல்களையும் முறைமன்ற நடுவத்தின் முன் இத்துடன் சமர்ப்பிக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

5. முறையீட்டு மனுதாரரின் மனு, அவருடைய வாக்குமூலம் மற்றும் திருவாரூர் நகராட்சி ஆணையரின் வாக்குமூலம் அவர் அளித்த அறிக்கை மற்றும் விசாரணையின் போது அவர் சமர்ப்பித்த ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. திருவாரூர் நகராட்சி ஆணையர் அவர்கள் **02.09.2021** அன்று முறைமன்ற நடுவத்தில் நடந்த விசாரணையின்போது அளித்த வாக்குமூலத்தில் முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ள திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட கேக்கரை பிடாரி கோயில் பகுதியில் பாதாள சாக்கடை குழாயில் ஏற்பட்ட பழுதினை இரண்டு வாரங்களுக்கு முன்பே சரி செய்யப்பட்டுவிட்டது என்றும், தற்போது அப்பகுதியில் சாக்கடை கழிவுநீர் தேங்குவதில்லை என்றும் பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார். அப்பகுதியில் பாதாள சாக்கடை குழாய்களில் ஏற்பட்ட பழுதுகள் சரி பார்க்கப்பட்டு தற்போது அவை நல்லமுறையில் இயங்கி வருவதாகவும் மற்றும் அப்பகுதியில் சாக்கடை கழிவு நீர் தேங்குவதில்லை என்பதற்கு ஆதார ஆவணமாக புகைப்பட நகல்களை சமர்ப்பித்துள்ளார்.

6. ஆனால் **08.03.2021** நாளிட்ட அறிக்கையில் அப்போதைய நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர் (கூ.பொ) அவர்கள் தனது வாக்குமூலத்தில் இக்குறைபாடுகள் **31.05.2020**-க்கு முன்னதாகவே சரி செய்யப்பட்டு விட்டதாக தெரிவித்துள்ளார். இது முன்னுக்குபின் முரணாக உள்ளது. முன்னாள் மற்றும் தற்போதைய ஆணையாளர்களின் இத்தகைய முரண்பட்ட வாக்குமூலங்களை இம்முறைமன்றம் வன்மையாக கண்டிக்கிறது. திருவாரூர் நகராட்சி ஆணையாளர் சமர்ப்பித்த அறிக்கை மற்றும் புகைப்பட நகல்களை பரிசீலனை செய்ததில் முறையீட்டு மனுதாரர் தன் மனுவில் குறிப்பிட்டுள்ள திருவாரூர் நகராட்சியில் உள்ள கேக்கரை பிடாரி கோயில் பகுதியில் உள்ள பாதாள சாக்கடை குழாய்கள் பழுது நீக்கப்பட்டு அவைகள் நல்ல முறையில் இயங்குவதும் அப்பகுதியில் சாக்கடை கழிவு நீர் தேங்குவதில்லை என்பதையும் அறிய முடிகிறது.

மேலும் திருவாரூர் நகரில் கேக்கரை பிடாரி கோயில் பகுதியில் பாதாள சாக்கடை கழிவு நீர் உடைப்பு காரணமாக அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதாகவும் மற்றும் கழிவு நீர் குடிநீர் குழாய்களில் கலந்து பொதுமக்களுக்கு வயிற்று போக்கு ஏற்பட்டதாக 12.03.2020 நாளிட்ட தினமனி நாளிதழிலும் (திருவாரூர் பதிப்பு) 18.03.2020 நாளிட்ட தினகரன் (திருச்சி பதிப்பு) நாளிதழிலும் "குட்டை போல் தேங்கும் பாதாள சாக்கடை கழிவுநீர்" என தலையங்கமிட்டு செய்தி வந்துள்ளது. மேலும் 14.03.2020 நாளிட்ட "தி இந்து" ஆங்கில நாளிதழிலும் இச்செய்தி வந்துள்ளது, இவைகள் அனைத்தும் குறைபாடுகள் நிகழ்ந்துள்ளது என்பதை தெளிவுபடுத்துகிறது. இதன் மூலம் சென்னையைச் சேர்ந்த கம்பெனி நிர்வாகம் வருட பராமரிப்பு செலவாக ரூ.88.00 லட்சம் (ரூபாய் எண்பத்திஎட்டு லட்சம் மட்டும்) பெற்றுக் கொண்டு பாதாள சாக்கடை கழிவுநீர் பராமரிப்பை சரிவர செய்யாமல் இருந்துள்ளது புலனாகிறது. மேலும் திருவாரூர் நகராட்சி நிர்வாகம் இச்செயலை கண்காணிக்க தவறியுள்ளது மிகவும் கண்டிக்கத்தக்கது.

8. எனவே, மேற்கண்ட குறைபாடுகள் குறித்து மனுதாரர் மனு அளித்தும் இச்செய்தி நாளிதழ்களில் வெளிவந்தும் எதையும் கண்டு கொள்ளாமல், சுகாதார சீர்கேடுகளுக்கு காரணமாக மெத்தனமாக செயல்பட்ட அப்போதைய திருவாரூர் நகராட்சி ஆணையாளர்கள் மற்றும் பொறியாளர்கள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கையினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. ஒழுங்கு நடவடிக்கை குறித்த நகல் ஒன்றை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

2021 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 28 ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு கோ.தவசிமுத்து,
17 A, சன்னதி தெரு, கேக்கரை, திருவாரூர் மாவட்டம்.

2) நகராட்சி ஆணையர்,
   திருவாரூர் நகராட்சி, திருவாரூர் 610 003.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
   ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
உதவி பதிவாளர்.

நகல். இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

செயலாளர்.